# வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் இசை, கலைநிகழ்ச்சிகள்

சென்னை, பிப்.23: வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் இசை, கலைநிகழ்ச்சிகள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பயணிகளைக் கவரும் வகையில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் பல்வேறு வசதிகளை செய்து வருகிறது. இதுதவிர, தமிழ் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தைக் கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, மெட்ரோ ரயில் நிலையங்களில் பல்வேறு இசை மற்றும் கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

அந்தவகையில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், நிமிர்வு கலையகம் அமைப்பு ஆகியன இணைந்து, வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் (தெருநிலை) பறையாட்டம் நிகழ்ச்சி, கலைநிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை மாலையில் நடைபெற்றது. இதை ஏராளமான பொதுமக்கள், பயணிகள் கண்டு ரசித்தனர்.